**செய்தி வெளியீடு எண்: 614** **நாள்: 26.09.2007**

## இந்து சமய அறநிலையத் துறை

### செய்தி வெளியீடு

திருக்கோயில்களில் களவு மற்றும் கொலை போன்ற நிகழ்வுகளை தடுத்திட மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உள்துறை செயலர் திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., அறநிலையத் துறை செயலர் திரு. து. இராஜேந்திரன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு. கே. விஜயகுமார், இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் (பொருளாதார குற்றப்பிரிவு) திருமதி. அர்ச்சனா இராமசுந்தரம், இ.கா.ப., காவல்துறை தலைவர் (பொருளாதார குற்றப்பிரிவு) திரு. எம்.கே. ஷா, இ.கா.ப., காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்ட கூட்டம் இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

- விக்கிரகங்கள் மற்றும் விலை உயர்ந்த ஆபரணங்கள் உள்ள திருக்கோயில்களில் நவீன தொழில்நுட்பம் கொண்ட கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தப்பட வேண்டும் என்றும்,
- உண்டியல்களுக்கு கள்வர் எச்சரிக்கை மணிக்கான சென்சார் பொறுத்தப்பட வேண்டும் என்றும்,

- திருக்கோயில்களில் இரவுக் காவல் பணிக்கு திடகாத்திரமான இளைஞர்களை தேர்வு செய்யவும்,
- ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 15 உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையங்களுடன், கூடுதலாக மாவட்டத்திற்கு ஒரு மையம் அமைத்திட வேண்டும் என்றும்,
- காவல் துறையின் மாவட்ட அளவிலான சீராய்வுக் கூட்டங்களுக்கு திருக்கோயில்களில் நடைபெறும் களவுகள் குறித்து விவாதிக்க இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களை அழைப்பது எனவும்,
- இரவு நேரங்களில், திருக்கோயில்களுக்கு அருகில் உள்ள காவல் நிலையங்கள் மூலம் ரோந்துப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பது எனவும்,
- காவல் துறையும், அறநிலையத் துறையும் அவ்வப்போது திருக்கோயில் பாதுகாப்பு தொடர்பாக பணிகளை உயர் அலுவலர்கள் நிலையில் சீராய்வு மேற்கொள்வது எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9